[பிற்பகல் 5-30]

(5) 1975-ஆம் ஆண்டு, சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1974).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு, சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

1921 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 3/1922) ஏனையவற்றிற்கிடையே தமக்கு குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ள நிலத்தின்மீது கட்டிடம் ஒன்றைக் கட்டிக்கொண்டுள்ளவரும், தமக்கெதிரான வெளியேற்று நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளவருமான குத்தகைதாரர் ஒருவர் அந்த நிலம் முழுவதும் அல்லது அதில் ஒரு பகுதி தமக்கு விற்பனை செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடுமாறு நீதிமன்றத்திடம் விண்ணப்பித்துக் கொள்ளும் உரிமையை அவருக்கு வழங்குகிறது. இச்சட்டம் தற்போதுள்ள நிலையில் சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்திடம் நிலைபெற்றுள்ள மற்றும் அதனால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களின் குத்தகைகளுக்குப் பொருந்துகிறது. குத்தகைதாரர் ஒருவருக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தை அவருக்கே விற்பனை செய்யுமாறு நிலச் சொந்தக்காரர் ஒருவர் கட்டாயப்படுத்தப்படலாம் என்று கூறுகின்ற மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகள் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் நலன்களுக்கு உகந்ததாயிராது என்று கருதப்படுகிறது. மேலும் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்திடம் நிலைபெற்றுள்ள மற்றும் அதனால் கையகப்படுத்தப்பட்டுள்ள மனைகளும் நிலத் துண்டுகளும் அதனிடமிருந்து வணிக நோக்குடையவர்களால் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு அனுமதிப்பது விரும்பத்தக்கதன்று. எனவே சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்திடம் நிலைபெற்றுள்ள அல்லது அதனால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களின் குத்தகைகளுக்கு அச்சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும் வகையில் அச்சட்டத்தைத் திருத்தக் கருதப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை இம் மேலவை ஏற்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

@ 278-279 ம் பக்கங்களில் இணைப்பு V-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாற்றுத் தலைவர் (திரு. எ. பாலசுப்பிரமணியம்) : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1975-ஆம் ஆண்டு, சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,
"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு, சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1974) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு எ. பாலசுப்பிரமணியம்) : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ம் ஆண்டு, சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1974) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1975).

The Hon. THIRU S. J. SADIQ PASHA: Mr. Vice-Chairman, Sir, I beg to move—

"That the Tamil Nadu Electricity Duty (Amendment) Bill, 1975 (L. A. Bill No. 16 of 1975), @ as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

@ 279-ம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.